<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 291/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கலைசெல்வன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.08.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில இரணடாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2022 ம் தேதி நான் ஓய்வில் இருந்ததால் என் மனைவியும் என் குழந்தையும் ராசி கல்யாண மண்டபத்திற்கு பொருள்கள் வாங்க சென்றிருந்தார்கள். அவர்களை அழைப்பதற்காக நான் எனது வண்டி splender ல் 09.10 மணிக்கு சென்ற போது கேரளா பதிவு எண்ணை கொண்ட கனரக வாகனம் மேம் பாலத்தில்இருந்து கீழே வந்து கொண்டிருந்தது. அந்த வண்டிக்கு பின்னால் ஆஜர் எதிரியும் மற்றொரு நபரும் ஸ்கூட்டியில் வந்து கொண்டிருந்தனர். வந்தவர்கள் என் வண்டியை மோதுவது போல் வந்தார்கள். நான் பார்த்து போக வேண்டியது தானே என்று கூறினேன். அவர்கள் 50 மீ தாண்டி பேக்கரியில் வண்டியை நிறுத்தவிட்டு என்னிடம் வந்து "நீ யாருடா கொம்மா புண்டை என்னை பார்த்து போனு சொல்லுவது கோத்தா" என்ற தகாத வார்த்தையால் திட்டினார். பின்னர் கன்னத்தில் ஆஜர் எதிரி அடித்து விட்டார். அவருடன் வந்தவர் எதுவும் செய்யவில்லை. பைக்கிலிருந்து கீழே தள்ளி விட்டார். பேக்கரியில் இருந்த

பெரியவர் வந்து கேட்டதற்கு அவரை தகாத வார்த்தையால் திட்டினார். எதார்த்தமாக அந்த வழியாக காவல் உதவி ஆய்வாளர் வந்து பார்த்தார். நான் சிவிலில் இருந்ததை தெரிந்து கொண்டார். காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள விவரம் தெரியும். அந்தபுகார் **அ.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. குறிப்பாக யாரை கேட்டு எதிரியின் பெயர் விலாச் தெரிநந்து கொண்டதகா புகாரிலும் வாக்குமூலத்த்லும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ நடைபெற்ற இடத்திற்கு காவல் நிலையத்திற்கு உள்ள தூரம் 200 மீ இருக்கும். சம்பவம் நடைபெற்ற இடம் ஆள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சம்பவ நேரத்தல் சிட்டி பேக்கரியில் கடையில் அதிலுள்ள நபர்கள மட்டும் இருந்தனர். மேபுறம் மற்றும் கிழபுறம் கடைகள் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ நடந்ததை உறுதி செய்ய சிசிடிவி கேமரா பதிவுகளை கைப்பற்றி விசாரணை அதிகாரியிடம் கொடுத்திரிகளா என்றாட்ல இல்லை. அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். சம்பவம் நடந்த உடன் போலிசாருக்கு தெரியுமா அல்லது மறுநாள் காலை தெரியுமா என்றால் மறுநாள் காலை புகார் கொடுத்ததும் தெரியும். சம்பவம் இரவு 09.00 மணிககு நடந்ததாக சொல்லியுள்ள காலை ஏன் புகார் கொடுத்திர்கள் என்றால் எனது குடும்பத்தினர் ராசி திருமண மண்டபத்திற்கு சென்றறிருந்தனர் அவர்களை அழைக்க சென்றதால் மறுநாள் காலை புகார் கொடுத்தேன். ராசி திருமண மண்டபத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ½ கி.மீ.

2. ½ மணிநேரம் கழித்து புகார் கொடுத்திருக்கலாம் என்3றால் எதிரியின் வீட்டில் அவங்க அம்மா அண்ணாவும் வந்து பேசினார்கள். மது போரையில் இருந்திரிகள் என்றால் ஆமாம்.சாட்சி பின்னிட்டு இல்லை என்று கூறிகிறார் நீங்கள் மது போதையில் இருந்ததால் தான் அன்றைய தின் புகார் கொடுக்கவில்ரலை என்றல் சரியல்ல. உங்களுக்கு வெளிப்புறம் காயம் இல்லை என்றால் கன்னத்தில் அடித்ததால் காயம் இல்லை. கன்னம் இடது கன்னம் என்று புகாரில் குறிப்பிடவில்லை எனறால் சரிதான் தாக்கியதாக சொல்லியுள்ளேன். நிலை தடுமாறி கீழே விழுந்ததாக சொல்லியுள்ள நிலையில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நீங்கள்எதிரியை தடுக்க வில்லை என்றால் அவர்கள் இருவரும் மது போதையில் இருந்தார்கள் சட்டென்று விழுந்துவிட்டேன். எதிரி மேம்பாலத்திலிருந்து தெற்கிலிருந்து வடபுறமாக வந்தார் என்றால் ஆமாம். நீங்கள வடக்கிலிருந்து தெற்காக போகிறிர்கள் என்றால் ஆமாம். மேம் பாலத்திற்கு அடிபுறத்தில் இருந்து வருபவர்கள் ரோட்டின் வலதுபுறமாக

வருவார்களா என்றால் சரிதான். எதிரி மேம்பாலத்திலிருந்து வரவில்லை என்று சொல்லியள்ள நிலையில் நீங்கள் தான் எதிரியை தாக்கினிர்கள் என்றால் இல்லை. நீங்கள் மது போதையில் இருந்திர்கள் என்றாலும் அதனாட்ல தான் காலை சென்று புகர் கொடுத்துள்ளிர் என்றாலும் சரியல்ல. நீங்கள் புகார்கொடுதத பிறகு நீங்கள் மருத்துவ பரிசோதனை செய்யவில்லை என்றால் ஆமாம்.

3. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரியை நீங்கள் தாக்கி விட்டு பொய்யாக புகார் கொடுத்திர்கள் என்றாலும் சரியல்ல. எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபட வில்லை என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.